2005 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உறுதியைத் தாங்கள் தருவதாக இருந்தால் நான் அந்த நிலைமையைப் பரிசீலிப்பேன். அவை முன்னவர் கொண்டுவந்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி மட்டுமல்ல, யாருமே இந்த அவையிலே உட்கார்ந்துகொண்டு பேசக் கூடாது என்பதில் தாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டும். நாங்களும் பரிதியை அப்படிப் பேசாமல் இருப்பதற்கு வாக்குறுதி அளிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி அவையில் கண்ணியத்தோடு செயல்படுவார் என்பதற்கான ஒரு வாக்குறுதியை தி.மு.க. சார்பிலே கூறியிருக்கிற காரணத்தால், தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நாளைக்கு அவரை அவைக்கு அழைத்து வாருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாளை என்பதை மாற்றி இன்றைக்கே வரச் சொல்ல வேண்டுமென்று... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரச் சொல்லுங்கள். திரு. பரிதி இளம்வழுதியை வந்து கலந்துகொள்ளச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–10

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்கள்... (குறுக்கீடுகள்)

(ஆ) திரு. பரிதி இளம்வழுதி அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம். பரிதி இளம்வழுதி இன்றைக்குக் கலந்துகொள்ளலாமா என்பதற்கு அவை முன்னவர் அவர்கள்தான் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

[2005 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று அவையில் கலந்துகொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேலு, பேசுங்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தைப் பற்றி நான் சொல்கிறபோது, வாக்கியங்கள் தொடர்ந்து அப்படித்தான் இருக்கும். எண்ணிக்கை எல்லாம் மாறும் என்று இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். 21 பாராக்கள் அப்படியேதான் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எண்ணிக்கையாவது மாறியிருக்கிறதா என்று சொன்னால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலு, இரண்டு மணித் துளியில் முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவது, இப்படித்தான் பேசுவார். அவையினுடைய நேரம் இவ்வளவு வீணாகிவிட்டது? (குறுக்கீடுகள்)

திரு. எ.வ. வேலு: 21 பாராவும் அப்படித்தான் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணிக்கையைப் பொறுத்த அளவிற்கு பக்கம் 3–லே பார்த்தால், வனத் துறையின்கீழ் 22,820 சதுர கிலோ மீட்டர் அது 17.584 விழுக்காடாக உயரும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது தொடர்ந்து 3 ஆண்டுகாலம் இதே எண்ணிக்கைதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும்